# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | STC No.223/2025 | Date: 17.07.2026 |
| Deposition of Witness for | : | பு.சா.2 | |
| Name | : | **செந்தில்குமார்** | |

(புகார்தாரர் அங்கமுத்து, எதிரி பிரபாகரன் ஆஜர் ).

**குறுக்கு விசாரணை:-**

1) எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. புகார்தாரர் அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். புகார்தாரர் அங்கமுத்து எங்கு வசித்து வருகிறார் என்றால் திருச்செங்கோடு, வட்டபரப்பு ஆகும். நான் வசிக்கும் இடத்திற்கும், புகார்தாரர் வசிக்கும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும்.

2) புகார்தாரருக்கு, எதிரி கொடுத்த கடனுறுதி சீட்டில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். எதிரியை எனக்கு தெரியுமா என்றால் கடனுறுதி சீட்டு எழுதி கொடுக்கும்போது பார்த்துள்ளேன். நான் சாட்சி கையொப்பம் செய்தபோது உடன் யார் யார் இருந்தது என்றால் அங்கமுத்து, பிரபாகரன், கண்ணன் மற்றும் கடனுறுதி சீட்டு எழுதிய சந்திரசேகர் ஆகியோர் இருந்தோம். கண்ணன், சந்திரசேகர் மற்றும் நான் ஆகியோர் நண்பர்கள் என்றால் சரியல்ல.

3) கண்ணன் எங்கு வசித்து வருகிறார் என்றால் திருச்சி, சமயபுரத்தில் வசித்து வருகிறார். சந்திரசேகர் எங்கு வசித்து வருகிறார் என்றால் திருச்செங்கோடு, தேவனாம்குறிச்சியில் வசித்து வருகிறார். சந்திரசேகர் மற்றும் நான் ஆகியோர் அடிக்கடி சந்திப்போம் இல்லை, ஏதேனும் விஷேசத்தின்போது சந்திப்போம், அவர் எனக்கு தூரத்து உறவினர்.

4) கடனுறுதி சீட்டு எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் முதல் கடனுறுதி சீட்டு 12-09-2023 ம் தேதி, இரண்டாவது கடனுறுதி சீட்டு 05-06-2024 ம் தேதி ஆகும். என்னிடம் காட்டப்படும் இரண்டு கடனுறுதி சீட்டுகளின் முதல் பாராவில் உள்ள சங்கதிகளின் கையெழுத்தும், மையும் மற்றும் இரண்டாவது பாராவில் உள்ள சங்கதிகளின் கையெழுத்தும், மையும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல. நான் புகார்தாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.1ல் திருத்தம் உள்ளதா என்றால் இரண்டு இடத்தில் திருத்தம் உள்ளது, அதற்காக கடனுறுதி சீட்டின் வலதுபுற ஓரத்தில் கையொப்பம் கடனுறுதி சீட்டு எழுதியவர் கையொப்பம் செய்துள்ளார். கடனுறுதி சீட்டுகள் இரண்டும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளவை என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலைக்கும், எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள கடனுறுதி சீட்டிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

6) புகார்தாரர் அங்கமுத்து, கண்ணன், சந்திரசேகர் மற்றும் நான் ஆகியோர் சேர்ந்து எதிரியின் தாயாரின் பெயரில் உள்ள சொத்தை மயிலாடுதுறை சார்-பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்வதற்காக டோக்கன் பெற்றோம் என்றால் சரியல்ல, அது

பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் அசல் ஆவணங்கள் புகார்தாரரிடம் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் கடனுறுதி சீட்டுகள் தவிர வேறு எதுவும் எனக்கு தெரியாது. எதிரி கடனும் வாங்கவில்லை என்றும், கடனுறுதி சீட்டுகளும் எழுதி கொடுக்கவில்லை என்றும், புகார்தாரர் அங்கமுத்து, கண்ணன், சந்திரசேகர் ஆகியோர் எனது நெருங்கிய நண்பர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7) எதிரி எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் இரண்டு கடனுறுதி சீட்டுகளிலும் சாட்சி கையொப்பம் செய்வதற்காக நான் புகார்தாரரின் வீட்டிற்கு சென்றேன் என்றால் சரிதான். நான் அங்கு சென்றபோது, அவரது வீட்டில் யார் யார் இருந்தது என்றால் அங்கமுத்து, சந்திரசேகர் அங்கிருந்தனர், வேறு யாருமில்லை. நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும், புகார்தாரர் கேட்டுக்கொண்டதற்காக நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-Senthilkumar

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.